00581

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் - 2018/2019
**ESP 2201 / STP8501**
கல்வி உளவியல்
பகுதி 1 இன் சகல வினாக்களுக்கும் பகுதி 2 இல் இருந்து எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடை எழுதுக
காலம் : 03 மணித்தியாலங்கள்

திகதி : 25.01.2020 நேரம்: மு.ப 9.30 - பி.ப 12.30

## பகுதி I

1. கல்வி உளவியல் கோட்பாடுகளுக்கு அமைவாக கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் 'மீள வலியுறுத்தலின்' முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.

2. ஆரம்பநிலை மனவெழுச்சிகள் ஐந்தினை (05) குறிப்பிட்டு அவை எவ்வாறு இரண்டாம் நிலை மனவெழுச்சிகளை கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச் செய்கின்றன என விளக்குக.

3. சிறுவர்களின் அறிகை விருத்தியில் மனவெழுச்சி எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என விளக்குக.

4. பிள்ளை ஆய்வு முறைகளில் பரிசோதனைசார் ஆய்வு முறைக்கும் பரிசோதனைசாரா ஆய்வு முறைக்கும் இடையிலான இரண்டு(02) வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக.

5. வெற்றிகரமான கற்றலை உறுதி செய்யக்கூடிய இரண்டு (02) காரணிகளை பொருத்தமான உதாரணங்களைப் பிரயோகித்து சுருக்கமாக விபரிக்குக.

6. I. முழுமையான புலக்காட்சியை பெற்றுக்கொள்வதை வசதி செய்யும் தூண்டிகளோடு தொடர்புபட்ட இரண்டு (02) காரணிகளை குறிப்பிடுக.

   II. மேலே நீங்கள் குறிப்பிட்ட ஒரு காரணி கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்கள் முழுமையான புலக்காட்சியைப் பெற்றுக் கொள்வதை எவ்வாறு வசதிப்படுத்தும் என சுருக்கமாக விளக்குக.

7. "வளர்ந்தோரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் உதாரணங்கள் சிறுவர்களின் ஆளுமையை விருத்தி செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான காரணியாகும்" இக்கூற்றினை பரிசீலிக்குக.

8. தனியாள் ஒருவரின் அறிகை விருத்திச் செயன்முறை தொடர்பில் புரூணர் முன்வைத்த பிரதான கோட்பாடுகள் இரண்டினை (02) சுருக்கமாக விளக்குக.

(5X8 = 40 புள்ளிகள்)

## பகுதி II

9. I. கற்றல்-கற்பித்தல் செயன்முறையின் போது கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைப்பதில் ஆசிரியர் ஒருவர் நிறைவேற்ற வேண்டிய வகிபாகங்கள் ஐந்தினை (05) முன்வைக்குக.

(05 புள்ளிகள்)

II. கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் நீங்கள் ஒழுங்கமைத்த கற்றல் அனுபவங்கள் மாணவர் அடைவு மட்டத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தும் விதத்தினை (அனுகூலமான/பிரதிகூலமான) ஆய்வு செய்ய வேண்டியுள்ளது என கற்பனை செய்து கொள்ளவும்.

a) மேற்படி தேவைக்காக நீங்கள் தெரிவு செய்யும் பிள்ளை நடத்தை ஆய்வுமுறை / முறைகளை குறிப்பிடுக.

(03 புள்ளிகள்)

b) நீங்கள் குறிப்பிட்ட பிள்ளை நடத்தை ஆய்வு முறைகளை தெரிவு செய்தமைக்கான காரணங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

III. தெரிவு செய்து கொண்ட இரண்டு(02) பிள்ளை நடத்தை ஆய்வு முறைகளைப் பிரயோகித்து நம்பகமும் தகுதியும் வாய்ந்த தகவல்களை சேகரித்துக் கொள்வதற்கு நீங்கள் முன்னெடுக்கும் வழிமுறைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

10. I. "சமநிலையான ஆளுமை" என்னும் பதத்தினை வரையறுக்குக.

(04 புள்ளிகள்)

II. சிறுவர்களிடத்தில் சமநிலையான ஆளுமையை விருத்தி செய்ய வேண்டியதன் தேவையை இலங்கையின் சூழமைவுடன் தொடர்புடைய உதாரணங்களை முன்வைப்பதன் ஊடாக விளக்குக.

(08 புள்ளிகள்)

III. சிறுவர்களிடத்தில் சமநிலையான ஆளுமையை விருத்தி செய்வதற்கு ஆசிரியர் ஒருவர் பயன்படுத்தக்கூடிய நான்கு (04) உபாயங்களை ஆளுமை பற்றிய கொள்கை ஒன்றுடன் தொடர்புபடுத்தி விளக்குக.

(08 புள்ளிகள்)

11. I. பியாஜேயின் அறிகை விருத்தி கோட்பாடு மற்றும் விக்கொட்ஸ்கியின் அறிகை விருத்தி கோட்பாடு என்பவற்றின் அடிப்படை கொள்கைகளையும் அவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளையும் விளக்குக.

(04 புள்ளிகள்)

II. விக்கொட்ஸியின் அறிகை விருத்தி கோட்பாட்டுடன் தொடர்புட்ட வகையில் பிள்ளைகளின் அறிகை விருத்திக்கு வசதி செய்யும் போது ஆசிரியர் பயன்படுத்தக்கூடிய நான்கு (04) உபாயங்களை விபரிக்குக.

(08 புள்ளிகள்)

III. மேற்படி உபாயங்களைப் பயன்படுத்தும் போது ஒரு ஆசிரியர் முகங்கொடுக்க வேண்டிய மூன்று(03) சவால்களையும் அவற்றை வெற்றி கொள்வதற்கான உங்களது ஆலோசனைகளையும் விளக்குக.

(08 புள்ளிகள்)

12. I. புருணரின் கற்றல் கொள்கைக்கு அமைவாக தனியாள் ஒருவரிடத்தில் கற்றல் எவ்வாறு இடம் பெறுகிறது என விளக்குக. (கண்டறிகற்றல்)

(06 புள்ளிகள்)

II. “ஆசிரியர் ஒருவர் ஆரம்பப்பிரிவு மற்றும் இடைநிலைப்பிரிவு வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்காக கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைக்கும் போது கண்டறிகற்றல் கொள்கைகளை பயன்படுத்திக் கொள்ளலாம்”. இக்கூற்றுக்கு சார்பாக உங்களது நோக்குகளை முன்வைத்து பொருத்தமான உதாரணங்களுடன் பரிசீலிக்குக.

(08 புள்ளிகள்)

III. புருணரின் கொள்கைக்கு அமைவாக வகுப்பறையில் கற்றல் அனுபவங்களை ஒழுங்கமைக்கும் போது ஆசிரியர் ஒருவர் முகங் கொடுக்கக்கூடிய மூன்று பிரச்சினைகளை விளக்குக.

(06 புள்ளிகள்)

13. பிள்ளை வளர்ச்சி மற்றும் விருத்தியை வசதிப்படுத்துவதில் பெற்றோர்களின் வகிபாகம் எனும் தலைப்பில் ஆரம்பப்பிரிவு பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடத்த வேண்டிய பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என கற்பனை செய்க.

I. பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி வளர்ச்சி மற்றும் விருத்தி என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(02 புள்ளிகள்)

II. பிள்ளைப்பருவத்திலுள்ள பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் விருத்தி தொடர்பாக பெற்றோர்களின் கவனத்தை ஈர்த்தெடுக்க வெண்டியதன் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

(06 புள்ளிகள்)

III. பிள்ளைகளின் வளர்ச்சி மற்றும் விருத்தி என்பவற்றில் பெற்றோர்களின் வகிபாகம் என்னும் உங்களது முன்வைப்பில் பின்வரும் அம்சங்களின் கீழ் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டிய பிரதான விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக.

அ) உடலியல்சார் விருத்தி
ஆ) அறிகைசார் விருத்தி
இ) மனவெழுச்சி விருத்தி
ஈ) சமூக விருத்தி
உ) ஒழுக்க விருத்தி

(12 புள்ளிகள்)

00581

14. I. தற்போதைய இலங்கை சமூகத்தில் வாழும் கட்டிளமைப்பருத்தினரின் மனவெழுச்சி விருத்தியில் வளர்ந்தோர் கவனம் செலுத்த வேண்டியது ஏன் என விளக்குக.

(06 புள்ளிகள்)

II. பாடசாலை செல்லும் கட்டிளமைப்பருவத்தினரிடத்தில் ஆரோக்கியமான மனவெழுச்சிகளை விருத்தி செய்வதில் வசதி செய்வதற்கு சகபாடிக் குழுக்களின் உதவிகளை எவ்வாறு ஒரு ஆசிரியர் பெற்றுக் கொள்ளலாம் என கலந்துரையாடுக.

(06 புள்ளிகள்)

III. கட்டிளமைப்பருவத்தினரிடம் மனவெழுச்சிகளை விருத்தி செய்வதில் பெற்றோரின் வசதிப்படுத்தல் தொடர்பான வகிபாகத்தினை விளக்குக.

(08 புள்ளிகள்)